ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2301/56 - 2022 ඔක්තෝබර් මස 14 වැනි සිකුරාදා - 2022.10.14
*2301/56 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45(4) ஆம் உறுப்புரையின்கீழ், மின்சக்தி மற்றும் வலுசக்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள எனது நேரடி விடயப்பரப்பின் கீழ் உள்ள செயற்பாடுகளான முறையே மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

**கஞ்சன விஜேசேகர,**
*மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2022, ஒற்றோபர் 12.*

**அட்டவணை**

**கௌரவ டி. வி. சாணக, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்**

**1. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்/ வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையம்**

- *எரிபொருட்களை இறக்குமதி செய்தல்*
- *எரிபொருள் கட்டளை பிறப்பித்தல்*
- *ஜெட் எரிபொருளை இறக்குமதி செய்தல்*
- *பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடுகளை செயற்படுத்துதல்*
- *சுத்திகரிப்பு நிலையத்திற்காக புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்*
- *இலங்கையில் புதிய சுத்திகரிப்பு நிலையங்களைத் தாபித்தல்*
- *புதிய வழங்குனர்களுக்கு உள்நாட்டுச் சந்தையைத் திறந்துவிடுதல்*
- *திருகோணமலை தாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்தல்*
- *தற்போதுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறத்தல்*

1A - G 37783 — 08 (2022/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2. வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலிய முனையம் (தனியார்)**

- தாங்கிப் பண்ணைத் தொகுதியை அபிவிருத்தி செய்தல்
- புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்

**3. இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை**

- இலங்கை கடற்பரப்புக்கு அப்பால் உள்ள இயற்கை வாயு மற்றும் எரிபொருள் அகழ்வு ஒழுங்கமைத்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்
- புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்
- வலுசக்திக் கேந்திரமாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல்

**4. இலங்கை மின்சார சபை/ இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபை**

- நாட்டின் மின்சார நுகர்வை பூர்த்திசெய்யுமுகமாக புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்கள், முதலீடுகள் மற்றும் திரவ இயற்கை வாயுத் திட்டங்கள் மூலம் பாரியளவிலான மின்சக்தி முதலீட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துதல்
- பரிந்துரைக்கப்பட்ட மற்றும் ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட ஒப்பந்தத் திட்டங்களைச் செயற்படுத்துதல்

**5. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்தல்**

**கௌரவ இந்திக்கா அனுருத்த, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்**

**1. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்/ வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையம்**

- பெற்றோலிய விநியோகம் மற்றும் களஞ்சிய செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர (QR) முறையை விருத்தி செய்தல்
- விவசாயம், மீன்பிடி மற்றும் தோட்டத் தொழிற்துறை, வலுசக்தி தொழிற்துறை, அத்தியாவசிய சேவை மற்றும் பொதுப் போக்குவரத்துக்கான எரிபொருள் விநியோக செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- பெற்றோலியக் களஞ்சியத் தாங்கிகள் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான நுகர்வை ஒழுங்கமைத்தல்

**2. வரையறுக்கப்பட்ட நிலக்கரி நிறுவனம் (தனியார்)**

- நிலக்கரியை கொள்வனவு செய்தல், தேவையான நிலக்கரியை வழங்குதல் மற்றும் நிலக்கரி நிறுவனத்தை மேற்பார்வை செய்தல்

**3. இலங்கை மின்சார சபை/ இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபை/ லங்கா மின்சார நிறுவனம்/ வரையறுக்கப்பட்ட எல். ரி. எல். ஹோல்டிங் நிறுவனம் (தனியார்)/ இலங்கை அணுசக்தி அதிகார சபை/ இலங்கை அணுசக்தி ஒழுங்கமைத்தல் சபை**

- கூரையில் சூரிய சக்தி மின்கலங்களை நிறுவுவதன் மூலம் மின்சாரத்தை பிறப்பித்தல்
- சிறிய அளவிலான மின்சக்தி உற்பத்தித் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- இலங்கை மின்சார சபைக்கு உரித்தான அனைத்து மின்சார இயந்திரங்களை மேற்பார்வை செய்தல்
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் சமய நிறுவனங்களில் சூரிய சக்தி மின்கலங்கள் நிறுவுதலை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- லங்கா மின்சார நிறுவனம்/ வரையறுக்கப்பட்ட எல். ரி. எல். ஹோல்டிங் நிறுவனம் (தனியார்)/ இலங்கை அணுசக்தி அதிகார சபை/இலங்கை அணுசக்தி ஒழுங்கமைத்தல் சபை போன்றவற்றை மேற்பார்வை செய்தல்

**4. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் ஏனைய அனைத்துப் பொருத்தமான நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்தல்**

EOG *10-0127*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.